Excess is Rs. 46 lakhs. In the third stage the estimate was Rs. 30 lakhs and the revised estimate was Rs. 16.45 lakhs. In the third stage, there is saving of Rs. 13.55 lakhs. The matter is under the consideration of Government and the revised has not yet been sanctioned by Government.

*** 252 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state :**

(*a*) whether any provision is being made in the Cooum Improvement Scheme for establishing Dhobikhanas to wash cloths; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) ஆம்.

(இ) நமச்சிவாயபுரத்தில் சலவைத்துறை அமைப்பதற்கு ரூபாய் பத்தாயிரத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. மேலும் இத்தகைய ஏற்பாடுகளைக் கீழ்க்கண்ட இடங்களில் அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசின் கவனத்திலுள்ளது.

இடங்கள்.	செலவு. ரூ.
1. அண்ணாநகர்	33,000
2. வெங்கடாசலம் பிள்ளைத்தெரு	20,000
3. அப்பாசாமி முதலித்தெரு, சேத்துப்பட்டு	24,000
4. அவ்வைபுரம்	20,000
5. நமச்சிவாயபுரம் (கிணறும் மேல்தளத் தொட்டியும்)	14,000
மொத்தம்	1,11,000

*** 253 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை கூவம் நதியில் அரசு படகு விடும் திட்டம் எப்போது செயல் படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : கூவத்தில் படகு விடும் திட்டம் தற்போது நடைபெற்று வரும் சீரமைப்பு வேலைகள் எல்லாம் முடிவுற்ற பின் எடுத்துக் கொள்ளப்படும். கூவம் சீரமைப்புப் பணிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா : கூவத்தில் படகு விடும் திட்டத்தில் பொது மக்களுக்குப் போக்குவரத்துத் துறைக்கு அது பயன்படுத்தப்படுமா அல்லது உல்லாசப் பயணிகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக்பாட்சா : அதுபற்றி இப்போது முடிவு எடுக்கப்படவில்லை. கூவத்தில் படகு விடும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட உல்லாசமாகப் பயணம் செய்யலாம்.